## தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## திருவாரூரில் இன்று தொடங்குகிறார்!

**தமிழ்நாடு முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.**

**இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று (மார்ச் 31ஆம் தேதி) திருவாரூரில் தொடங்குகிறார்.**

**தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முதற்கட்டமாக முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், ஊரான திருவாரூரில் பரப்புரையை தொடங்குகிறார்.**



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **31.03.2026 (செவ்வாய்க் கிழமை)** | | |
| மாலை 5 மணி | **திருவாரூர்** **தெற்கு ரத வீதி** (பொதுக்கூட்டம்) | திருத்துறைப்பூண்டி, திருவாரூர், நன்னிலம், மன்னார்குடி |
| **01.04.2026 (புதன் கிழமை)** | | |
| காலை 9 மணி | **திருச்சி** **உழவர் சந்தை** (பொதுக்கூட்டம்) | திருச்சி மேற்கு, திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர் திருவரங்கம், மணப்பாறை, முசிறி, துறையூர் |
| மாலை 5 மணி | **கரூர்** **ராயனூர்** (பொதுக்கூட்டம்) | அரவக்குறிச்சி, கரூர், கிருஷ்ணராயபுரம், குளித்தலை |
| **02.04.2026 (வியாழக் கிழமை)** | | |
| காலை 9 மணி | **ஈரோடு** **சித்தோடு** (பொதுக்கூட்டம்) | பவானிசாகர், ஈரோடு மேற்கு, மொடக்குறிச்சி, பெருந்துறை, அந்தியூர், கோபிசெட்டிபாளையம், ஈரோடு கிழக்கு, பவானி |
| மாலை 5 மணி | **கோவை** **கொடிசியா மைதானம்** (பொதுக்கூட்டம்) | சூலூர், கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர் தெற்கு, சிங்காநல்லூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, வால்பாறை |

**குறிப்பு :** கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்லவேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள் : 29,03,2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க





வேலூர் மாவட்டம், காட்பாடி சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளரான கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களுக்கு காட்பாடி சித்தூர் பேருந்து நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. உடன் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், கேவி.குப்பம் தொகுதி தி.மு.க. வேட்பாளர் ராஜேஸ்வரி மோகன்காந்தி, மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்கள், திருச்சிராப்பள்ளி மேற்கு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வேட்பு மனுவை நேற்று (30.03.2026) திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் அதிகாரி சாலை தவ வளவனிடம் வழங்கினார். அவருடன் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் வெல்லமண்டி சோமு, தொழிலதிபர் ரவிச்சந்திரன் உட்பட அரசு அதிகாரிகள் உள்ளனர்.



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சைதைத் தொகுதி தி.மு.கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் நேற்று (30–3–2026) கிண்டியில் உள்ள தேர்தல் நடத்தும் அலுவலரிடம் சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்கான வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார். உடன் காங்கிரஸ் மாவட்ட தலைவர் முத்தமிழ், வி.சி.க. ம.ஜேக்கப், சி.பி.ஐ. – கே.மணிகண்டன், தே.மு.தி.க. மடுவை ஆர்.சுப்பு உள்ளிட்டோர் உள்ளனர்.